# "State should adopt need-based approach on funds allocation to tribal areas"

T. Ramakrishnan

**CHENNAI:** The State government should adopt a need-based approach on the allocation of funds for tribal areas instead of population-based, according to Rameshwar Oraon, Chairperson, National Commission for Scheduled Tribes (NCST).

After discussions with senior officials of the government, the NCST chief told *The Hindu* that the tribal areas in the State were "very backward". As they required greater funds, the allocation on the basis of population would not be adequate as the tribal people accounted for only one per cent of the State population.

Calling upon the government to create an exclusive department for the welfare of Tribes, Dr. Oraon, who is holding the post of NCST Chairman since October 2010, wanted the administration to pay more attention to issues concerning infrastructure development of the tribal areas.

Many States, including Madhya Pradesh, Odisha, Chattisgarh and Jharkhand, had separate departments for the STs. In Tamil Nadu, the matter was being handled by the Department for Adi-Dravidar Welfare.

Asked about his impression of the living conditions of the tribes in the State, Dr. Oraon, who went to the Nilgiris district for a first-hand knowledge of the conditions of the tribal groups, including Kattunayakan, Irular, Toda and Paniyars, said the gap between the tribes and the rest of society had remained unchanged over the years.

Citing the data of the Census 2001, he said the literacy rate of the STs was only 41.5 per cent whereas the State average was 73.5 per cent.

Also, the STs accounted for 25 per cent of the population living below the poverty line (BPL) in the State.

The NCST Chairman, who was an officer of the 1972 batch of the Indian Police Service before getting elected on the Congress ticket from the Lohardaga Parliamentary constituency of Jharkhand in 2004, advised the State government to go in for appeal where those accused of having indulged in violence against the STs had been acquitted.

He also raised with the officials of the State government the issue of others grabbing lands given to the Tribes in the Nilgiris District.

Dr. Oraon, who was Union Minister of State for Tribal Affairs from 2008 to 2009, said the issues of fake (ST) community certificates in circulation and genuine persons not getting the community certificate were also discussed.

The government assured the Commission of expeditious action in such cases.

Sheela Balakrishnan, Chief Secretary (in-charge), led the State government's team of officials in the discussion with the NCST.

Later Mr. Oraon called on Governor K. Rosaiah at Raj Bhavan and briefed him about the various problems faced by Adi Dravidas in the State. He was accompanied by Members of the Commission K. Kamala Kumari and B.L. Meena, a press release stated.

# Panel Urges Govt to Form Separate Dept for ST Welfare

**Express News Service**

**Chennai:** Rameshwar Oraon, chairman, National Commission for Scheduled Tribes, on Friday urged the Tamil Nadu government to create a separate department to protect the welfare of Scheduled Tribes in the State.

Addressing a press conference at the Secretariat after reviewing the implementation of the reservation policy and developmental schemes for welfare of STs, Oraon said, at present, only one per cent of reservation was being provided to STs in education and government employment. "The economic status of this community could be enhanced if the percentage of reservation for them is hiked. Despite many years of independence, the standard of life of STs is yet to go up," he said. The average percentage of their education stood at 34 and of those living under the Below Poverty Line, 25 per cent are STs, he added.

Oraon said the commission had also brought to the notice of the government, complaints that non-STs were getting community certificates as STs after making false claims.

Oraon said the members of the commission had visited areas like the Nilgiri district where STs were living in large numbers, from June 28 onwards and held detailed discussions with the State government officials on the developmental projects to be implemented for them.

Hailing the measures envisaged for the uplift of STs in the Vision 2023 Document released by Chief Minister J Jayalalithaa, Oraon said one of the important issues faced by the STs in Nilgiris district was encroachment of lands given to them by the government.

# பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்

## தமிழக அரசுக்கு தேசிய பழங்குடியினர் ஆணைய தலைவர் யோசனை

சென்னை, ஜூலை.7– அரசு வேலைவாய்ப்பில் பழங்குடியினருக்கு வழங்கப்படும் ஒரு சதவீத இடஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர் ராமேஸ்வர் ஓரான் யோசனை தெரிவித்துள்ளார்.

### தேசிய பழங்குடியினர் ஆணையம்

தமிழ்நாட்டில் பழங்குடியின மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் அறிந்து கொள்ளும் வகையில் தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர் ராமேஸ்வர் ஓரான், உறுப்பினர்கள் காம்ளா குமாரி, பி.எல்.மீனா, இணைச்செயலாளர் ஆதித்யா மிஸ்ரா, துணை இயக்குனர் கே.டி.பன்சார், உதவி இயக்குனர் ஆர்.கே.துபே ஆகியோர் பழங்குடியினர் அதிகம் வசிக்கக்கூடிய நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 25–ந் தேதி தொடர் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

தங்கள் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு நேற்று தலைமைச் செயலகத்தில் அரசு உயர் அதிகாரிகள், உயர் போலீஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். நாமக்கல் மாளிகை கட்டிட கூட்டரங்கில் நடைபெற்ற இந்த ஆய்வு கூட்டத்தில், கூடுதல் தலைமைச்செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், உள்துறை முதன்மைச்செயலாளர் ராஜகோபால், போலீஸ் டி.ஜி.பி. ராமானுஜம் மற்றும் அரசு துறைகளின் செயலாளர்கள், உயர் போலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### பழங்குடியினரின் பிரச்சினைகள்

காலை 10 மணிக்கு தொடங்கிய இந்த கூட்டம் மதியம் 1 மணி வரை நீடித்தது. கூட்டம் முடிந்த பியகு தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் தலைவர் ராமேஸ்வர் ஓரான் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் தோடர், குரும்பர், படுகர், இருளர், கோடர் போன்ற பழங்குடியினர் அதிகளவில் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கு நேரில் ஆய்வு செய்தோம். அந்த மக்கள் தாங்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சினைகளை எங்களிடம் எடுத்துரைத்தனர். பழங்குடியினரின் பிரச்சினைகளை போக்குவது குறித்து நாங்கள் அரசு உயர் அதிகாரிகளிடம் ஆய்வு செய்தோம்.

### தமிழக அரசுக்கு பாராட்டு

தமிழக அரசு பழங்குடியினரின் நலனுக்காக திறன் மேம்பாட்டுப்பயிற்சி, பழங்குடியினர் வசிக்கும் கிராமங்களில் சூரியஒளியில் மின்சாரம் உள்பட பல மேம்பாட்டுத்திட்டங்களை செயல்படுத்தி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. முதல்–அமைச்சர் அறிவித்துள்ள தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம்–2023–லும் பழங்குடியினர் நலனுக்கான திட்டங்கள் இடம்பெற்றிருப்பதை எண்ணியும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இருந்தபோதும், பழங்குடியினரின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாமல் உள்ளன. அந்த பிரச்சினைகளை தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பழங்குடியின சமுதாயத்தில் படிப்பவர்களிலும் பெரும்பாலானோர் 10–ம் வகுப்புக்கு மேல் செல்வதில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் வெளிநபர்களால் அபகரிக்கப்பட்டு உள்ளன. பழங்குடியின மக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருகின்றன. இதுதொடர்பாக 2 மாதத்திற்குள் வழக்குகளை விசாரித்து முடித்துவிடுவதாக போலீஸ் அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

### போலி சான்றிதழ் கொடுக்கிறார்கள்

நாடு சுதந்திரம் அடைந்து ஆண்டு 65 ஆண்டுகள் ஆகின்றன. பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் மத்திய அரசு ஏராளமான நிதியை ஒதுக்கி வருகிறது. ஆனால், அவர்களின் வாழ்க்கை தரம் இன்னும் உயர்ந்தபாடில்லை. பெரும்பாலானால் வறுமை கோட்டுக்கு கீழ்தான் உள்ளனர்.

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் பழங்குடியினருக்கு 1 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. பழங்குடியினருக்கான வேலைவாய்ப்பில் பலர் போலி சான்றிதழ் கொடுத்து சேரும் நிலையும் உள்ளது. இதனால், உண்மையான பழங்குடியினர் பாதிக்கப்படுகிறார்கள். இந்த பிரச்சினைக்கு அடுத்த சில மாதங்களில் தீர்வு காண்பதாக அதிகாரிகள் உறுதி அளித்தனர். தமிழக அரசுக்கு ஒருசில யோசனைகளை வழங்கி உள்ளோம். அதன் விவரம் வருமாறு:–

### இடஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்

★பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். போதிய அளவுக்கு சாலை வசதி, சுகாதார வசதிகளை செய்துகொடுக்க வேண்டும்.

★இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இருப்பதை போல தமிழ்நாட்டிலும் பழங்குடியினருக்கென தனி ஆணையத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோல் பழங்குடியினருக்கென தனி துறையையும் உருவாக்க வேண்டும்.

★அரசு வேலைவாய்ப்பில் தற்போது வழங்கப்பட்டு வரும் ஒரு சதவீத இடஒதுக்கீட்டை உயர்த்தி வழங்க வேண்டும்.

மேற்கண்ட யோசனைகளை தமிழக அரசு நிச்சயம் செய்யும் என்று நம்புகிறோம். எஸ்.டி. பட்டியலில் தமிழக அரசு புதிய சமூகத்தினரை சேர்க்க விரும்பினால் அது தொடர்பாக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தால் நாங்களும் தேவையான அனைத்து உதவிகளைச் செய்வோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பழங்குடியினர் வாழ்க்கை தரம் உயரவில்லை

## ஆய்வில் 'திடுக்' தகவல்

சென்னை, ஜூலை 7-

பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டை, 1 சதவீதத்தில் இருந்து உயர்த்த வேண்டும்; இவர்களுக்கென தனி துறையை அமைக்க வேண்டும் என, தேசிய பழங்குடியினர் நல ஆணையம், தமிழக அரசிற்கு ஆலோசனை வழங்கி உள்ளது.

பழங்குடியினருக்கான நலத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக, ஆணையத் தலைவர் ராமேஷ்வர் ஓரான் தலைமையில், ஐந்து பேர் கொண்ட குழுவினர், தமிழகத்திற்கு கடந்த 28ம் தேதி வந்தனர்.

### குறைகேட்பு

முதல்கட்டமாக நீலகிரி மாவட்டத்தில், மலைப் பகுதியில் பழங்குடியினர் வாழிடங்களுக்குச் சென்று, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தனர். சென்னைக்கு வந்த அவர்கள், தமிழக அரசு அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினர். அதன்பின் நிருபர்கள் சந்திப்பில், ஆணைய தலைவர் ராமேஷ்வர் ஓரான் கூறியதாவது:

நீலகிரி மாவட்டத்தில், ஆறு பிரிவு திராவிட பழங்குடியினர் வாழும் பகுதிகளில் ஆய்வு நடத்தினோம். பழங்குடியினருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கிராமங்களில் சூரிய மின் விளக்குகள், பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன. தமிழக அரசின், 'தொலைநோக்குத் திட்டம்-2023'யிலும், பழங்குடியினருக்கான சிறப்பு திட்டங்கள் அதிகளவில் உள்ளன.

### பிளஸ் 2 பிரச்னை

பழங்குடியின மாணவ-மாணவியர், 10ம் வகுப்பு வரை படிப்பதில் பிரச்னை இல்லை; பிளஸ் 2 மற்றும் கல்லூரி படிப்பிற்கு செல்லும் போது, அவர்களுக்கு சேர்க்கைக்கான வாய்ப்பு கிடைப்பதில்லை.

பழங்குடியினருக்காக அரசு, ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் ஒதுக்கியது. ஆனால், கடந்த 15 ஆண்டுகளாக, அவர்கள் நிலங்கள் வேறு நபர்களின் பிடியில் சிக்கியுள்ளன. இது தொடர்பாக, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு, அவர்களும் பிரச்னையை தீர்ப்பதாக உறுதியளித்து உள்ளனர்.

பழங்குடியினருக்கு எதிரான வன்முறை வழக்குகளில், சில நிலுவையில் உள்ளது குறித்து, தமிழக உள்துறை செயலர் மற்றும் டி.ஜி.பி.,யுடன் விவாதிக்கப்பட்டது. இதுகுறித்த விசாரணை, குற்றப்பத்திரிகை தாக்கல் விரைவில் முடிக்கப்படும் என, அவர்கள் உறுதி அளித்தனர்.

### தனித்துறை அவசியம்

பழங்குடியின மக்களை பொறுத்தவரை, இன்னும் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்களது சராசரி கல்வியறிவு, 34 சதவீதம் மட்டுமே. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களில், 25 சதவீதத்தினர் பழங்குடியினர்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில், மாநிலத்தில், 1 சதவீதம் மட்டுமே, இவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப் படுகிறது. இதை உயர்த்தினால், அவர்கள் பொருளாதாரம் மேம்படும். பழங்குடியின மக்களை மேம்படுத்த, அவர்கள் வாழும் பகுதியில் உள்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் நலனிற்காக, தனித்துறை உருவாக்க வேண்டும் என, அரசு அதிகாரிகளிடம் வலியுறுத்தி உள்ளோம்.

இவ்வாறு ராமேஷ்வர் ஓரான் கூறினார்.

### ஆசிரியர் பற்றாக்குறை

பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள பள்ளிகளில், ஏழு ஆசிரியர்கள் பணியாற்றும் இடத்தில், நான்கு அல்லது ஐந்து ஆசிரியர்களே பணியாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

# மாநில பழங்குடி நல ஆணையம் அமைக்க அரசுக்கு பரிந்துரை

சென்னை, ஜூலை 7: பழங்குடியினருக்கான இடஒதுக்கீடு கொள்கை, அவர்களுக்கான வளர்ச்சி திட்டங்கள் குறித்த மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் சென்னையில் நடந்தது.

தேசிய பழங்குடியினர் நல ஆணைய தலைவர் ரமேஷ்வர் ஓரான் தலைமை வகித்தார். தலைமை செயலாளர் (பொறுப்பு) ஷீலா பாலகிருஷ்ணன், டிஜிபி ராமானுஜம் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். பிறகு ரமேஷ்வர் ஓரான் அளித்த பேட்டி:

பழங்குடியினர் நலன் காக்க தேசிய அளவிலான ஆணையம் இருப்பது போல மாநில அளவிலான ஆணையம் அல்லது வாரியம் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தால் பழங்குடியினர் நலன் காக்கப்படும் என்று மாநில அரசுக்கு பரிந்துரை செய்துள்ளோம்.

பழங்குடியினர் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்தி, கூடுதல் பள்ளிகள் ஏற்படுத்த மாநில அரசுக்கு பரிந்துரைத்துள்ளோம். படுகர் இனத்தை எஸ்.டி பட்டியலில் சேர்க்க வலியுறுத்தி பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். அந்த கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.